ஊழியர் நலன்கள் மட்டும்தான் செலவா?

BSNL நிர்வாகம் செலவை கட்டுப்படுத்துவது என்ற பெயரில் பல வெட்டுகளை நிறுத்தங்களை உத்தரவாக வெளியிட்டுள்ளது. LTC, LTCன் போது விடுப்பை காசாக்குவது, MRS without Voucher ஆகியவற்றை வெட்டியுள்ளது. All India LTC இரு ஆண்டுகளுக்கு நிறுத்தப்பட்டுள்ளது. LTCன் போது விடுப்பை காசாக்குவது மற்றும் MRS without Voucher ஆகியவற்றிற்கான உத்தரவுகள்/ வழிகாட்டல்கள் திரும்பப் பெறப்படுகின்றன.

LTC, LTCன் போது விடுப்பை காசாக்குவது ஆகிய நிறுத்தங்க்ள் உடனடியாக அமுலாக்கப்படவுள்ளன, MRS without Voucher வருகிற 1-10-2011 முதல் நிரந்தரமாக நிறுத்தப்படவுள்ளது.

BSNLEU உடன் நடந்த 25வது தேசியக் கவுன்சில் கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக சென்ற புதிய CMD தனது உரையில் பல்வேறு நிறுத்தங்கள் செய்யப்பட இருக்கின்றன என்பதை தெளிவாகவே தெரிவித்தார்.

"The CMD BSNL also indicated that the Company may have to consider certain Cuts which may seem difficult at present, but in future these will give us happiness"

ஜூலை 29 அன்று BSNL நிர்வாகம் வெளியிட்ட மினிட்ஸில் அது பதிவாகியும் உள்ளது. CMD அறிவித்த மூன்றே மாத காலத்திற்குள் நிறுத்தங்கள் குறித்த உத்தரவுகள் வெளியாகிவிட்டன. BSNLEU தனது மேல் தானே வைத்திருக்கும் மிகை நம்பிக்கையில் CMDன் அறிவிப்புகளை serious ஆக எடுத்துக்கொண்டு வரும் முன் காப்பதற்குரிய நடவடிக்கைளை எடுக்க தவறிவிட்டது. தனக்கு கிடைத்த 3 மாதகால அவகாசத்தை தவற விட்டுவிட்டது. அனைத்து சங்க ஒற்றுமையை கட்டி தானடித்த மூப்பாக நிர்வாகம் உத்தரவுகளை வெளியிட வகையின்றி செய்யவும் தவறிவிட்டது.

உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட நிலையில் NFTEன் தலைமை செப் 6 அன்றும் BSNLEU செப் 7 அன்றும் ஆர்ப்பட்ட அறை கூவலை விடுத்துள்ளோம். BSNLEUஆல் செப் 7 ஆர்ப்பாட்டத்தை JAC சார்பில் கொடுக்கமுடியாமல் போனது ஏன் என தெரியவில்லை. போராட்டத்தை- தேதியை தான் முடிவு செய்வதற்கு முன்னர் NFTE போன்ற சங்கத் தலைமைகளை கலந்து முடிவெடுத்திருந்தால்

பரந்துபட்ட போராட்ட வெம்மையை நிர்வாகத்திற்கு நம்மால் உணர்த்தமுடியும்.

தடுத்து ஊழியர் நலன் காக்கும் இயக்கம் கட்டப்போவதில்லை, வெறும் எதிர்ப்பு இயக்கம்தான் என்றால் BSNLEUவிடம் இதற்குமேல் நாம் எதிர்பார்க்க முடியாது. சென்ற ஆண்டு 30 ஆண்டுகளுக்கு மேலாக பெற்று வந்த போனசை இழந்தோம். இவ்வாண்டு போனஸ் கோரிக்கை அதற்கான ஆர்ப்பாட்டம் என்பன கிளம்புவதற்கு முன்னால் வெட்டுகள் வரத் துவங்கியுள்ளன. MRS without Voucher 8 ஆண்டுகளாக பெற்று வந்த ஒன்று. வங்கி மற்றும் பொதுத்துறைகளில் பல ஆண்டுகளாக வழங்கப்பட்டு வரும் சலுகையது. தற்போது வெட்டப்பட்டுள்ளது.

. Customer Delight தவிர வேறு Agenda அங்கீகரிக்கப்பட்ட சங்கத்திற்கு இல்லை என்ற முடிவிற்கு ஒருவேளை நிர்வாகமும் வந்திருக்கலாம். தேசியக் கவுன்சில் கூட்டத்திலேயே சூசகமாக அறிவித்துவிட்டோம் என நிர்வாகம் நினைத்திருக்கலாம்.. ஒன்றுபட்ட போராட்டங்களுக்கான சூழல் இல்லை என்பதையும் நிர்வாகம் கணித்து துணிச்சலாக முடிவெடுத்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் (2006,07,08,09,10) முறையே 329.77, 364.50, 416.83, 431.22, 484.06 கோடி MRS Headல் செலவாக காட்டப்பட்டுள்ளது. இதில் Outdoor treatment செலவு எவ்வளவு Indoor treatment செலவு என்ன என்ற break up தெரியவில்லை. Outdoor treatmentல் Voucher Claim எவ்வளவு without Voucher செலவு என்ன என்ற break up ம் தெரியவில்லை. இவற்றையெல்லாம் விளக்கி சொல்லவேண்டும் என்ற பொறுப்புக்கூட நிர்வாகத்திற்கு இல்லை.

BSNLல் நட்டம் வந்ததற்கு முழு பொறுப்பும் உயர் நிர்வாகத்தை சேர்ந்ததே. ஊழியர் தலையில் கட்டி நலத்திட்டங்களை வெட்டுவது கம்பெனியின் தொழில் உறவுகளை கடுமையாக பாதிக்க செய்திடும். எனவே முறையாக சங்கங்களை அழைத்து நிர்வாகம் பேசிட வேண்டும். நிறுத்தங்களை நிறுத்திட வேண்டும். இல்லையெனில் தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்த அறைகூவலைவிட வேண்டும்.

6-9-11